15

விதியின்படி இவ்வாசிரியர் ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணி நியமனத்தற்கு சார்ந்த மொழிப் பாடத்தில் முதுகலையில் பட்டம் பெற்றும், பி.எட். பட்டயச் சான்றும் உள்ளதால் மேற்படி காலிப் பணியிடத்திற்கு பதவி உயர்வில் நியமனம் செய்திட போதியகல்வித தகுதிகளை பெற்றுள்ளார்.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 விதி 1974–ன் விதி 15 (4) (iii)–ல் ஒரு பணியிடம் காலி ஏற்படின், அப்பணியிடம் அப்பள்ளியின் தகுதி பெற்ற ஆசிரியர்களுக்குள் பதவி உயர்வு வழங்கலாம் எனவும், பதவி உயர்வுக்கு தகுதி பெற்ற நபர் இல்லாத நிலையில் மட்டுமே நேரிடை நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11.11.13 முதல் காலி ஏற்பட்டுள்ள ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடமானது பதவி உயர்வு பணியிடமாகும். நேரிடையாக நியமனம் செய்யப்படும் பதவி அல்ல.

மேலும் பார்வை 3–ல் காணும் செயல்முறையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் விதி 10 முதல் 14, 16 முதல் 18, 22 முதல் 24 ஆகிய விதிகள் மட்டுமே சிறுபான்மை பள்ளிகளுக்கு பொருந்தாது எனவும், ஏனைய விதிகள் சிறுபான்மை பள்ளிகளுக்கு பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 11.11.13 முதல் காலி ஏற்பட்டுள்ள ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தை பதவி உயர்வு மூலம் நிரப்பாமல், நேரிடைய நியமனம் செய்வது தகுதியுள்ள ஆசிரியரின் அடிப்படை உரிமையை பறிப்பதாகும். இயற்கை நியதியை மீறுவதாகும்.

எனவே மனுதாரரின் 05.02.14 நாளிட்ட கோரிக்கை ஏற்கப்பட்டு, 11.11.13 முதல் காலி எற்பட்டுள்ள ஆங்கில முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தினை தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார்பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 விதி 15 (4) (iii)–ன் படிபதவி உயர்வின் மூலம் நிரப்பலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
திருநெல்வேலி.

பெறுநர்
திரு ஜி.அந்தோணி நிக்சன்,
பட்டதாரி ஆசிரியர்,
ஹோலி ரெடிமீர்ஸ் மேல்நிலைப் பள்ளி,
திசையன்விளை,

நகல்–மேலாளர், கத்தோலிக்க பள்ளிகள்
(R.C.Schools)
தூத்துகுடி மறை மாவட்டம்,
தூத்துக்குடி.

நகல்–மாவட்டக் கல்வி அலுவலர், சேரன்மகாதேவி